நாளைய தலைமுறையைப் பற்றி யோசிக்கும் தலைவராக, எதிர்காலத் தமிழகம் ஏற்றம் பெற வேண்டும் என்ற நோக்கில் மிக முக்கிய அறிவிப்பை இன்றைக்கு வெளியிட்டிருக்கின்றார்கள்.

முற்பகல் 11—40

இன்றைக்கு, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான காவிரி டெல்டா பகுதியின் வடிகால் வசதிகளை மேம்படுத்தவும், கடல் நீர் உட்புகாமல் தடுக்கவும், 1,560 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டங்களை அறிவித்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு விவசாயிகள் அனைவரின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, பவானிசாகர் குடியுரிமைப் பயிற்சி நிலையத்தை சிறந்த பயிற்சி நிலையமாக உயர்த்த 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு வசதிகள் செய்து கொடுக்க அறிவிப்பு வெளியிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ச. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011—2012 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தாறு முதல் அறுபது வரையிலான 35 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை*